# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

## முன்னிலை : திரு. செ.தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 56 /2017

திரு. ஆர். ஜோதிபாசு,
த/பெ ராமசாமி,
எண்.208, கருப்பண்ண கவுண்டர் தெரு,
வெங்கமேடு,
கரூர்–639 006. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. ஆர். ஜோதிபாசு)

எதிர்

செயற்பொறியாளர்/நகர்புறம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு,
கரூர்–639 002. . . . எதிர்மனுதாரர்
(திரு. T. மகாலிங்கம், உதவி செயற்பொறியாளர்/வடக்கு/கரூர் &
திரு. M. முருகன், உதவி பொறியாளர்/வெங்கமேடு)

## கேட்புரை நாள் : 7–11–2017

## ஆணை நாள் : 20.03.2018

திரு. ஆர். ஜோதிபாசு, த/பெ ராமசாமி, வெங்கமேடு, கரூர் அவர்களின் 5.9.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.56/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 7.11.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மனுதாரரின் மின் இணைப்பு எண்.004–016–697/TF.IIIB- ல் தணிக்கை துறையினாரால் மின்னளவி பழுது என சராசரி மின் கட்டணம் விதிக்கப்பட்டுள்ள ரூ.6,39,108/–ஐ தள்ளுபடி செய்து தக்க தீர்ப்பினை வழங்க கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்:

2.1 மனுதாரருக்கு சொந்தமான மின் இணைப்பு எண்.004–016–697/TF.IIIB- இருந்த கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டு, வாடகைதாரர் விசைத்தறி நடத்தி வந்தனர் என்றும் வாடகைதாரர் இடத்தை காலி செய்தவிட்ட பின்பு மின் உபயோகம் இல்லாத காலத்திற்கு மின்னளவி பழுது என, சராசரி மின் கட்டணம் விதித்து ரூ.6,39,108/–ஐ செலுத்த வேண்டும் என தனக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக வாடகை ஒப்பந்த பத்திர நகலுடன் உதவி மின்பொறியாளர்/இகா/வெங்கமேடு அவர்களிடம் பலமுறை முறையீடு செய்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

2.2 இது தொடர்பாக தனது 15.3.2016 நாளிட்ட கரூர் மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர் மன்ற தலைவர் அவர்களுக்கு அனுப்பிய மனுவிற்கு மன்றம் தனது 3.5.2017 நாளிட்ட ஆணையினை வழங்கியுள்ளது.

2.3 மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

### 3. மன்றத்தின் தீர்வு

3.1 கரூர் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 3.5.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***<u>மன்றத்தின் தீர்வு:</u>***

*மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பு எண்.**004–016–697/** TF.IIIB, மின் பயனீட்டு அளவுகளை ஆராய்ந்ததில், மின் பயனீட்டு அளவு **06/2009** முதல் **12/2013** வரை உள்ள காலங்களில் **1240** யூனிட்டாக இருந்து படிப்படியாக குறைந்து **120** யூனிட் வரை உபயோகபடுத்தியதாக பதிவாகி உள்ளது கண்டறியப்படுகிறது.*

*மேலும் மனுதாரர் மின் உபயோகம் குறைவாக பயன்படுத்தியமைக்கு ஆதாரமாக சமர்ப்பித்த ஆவணங்கள் யாவும், ஏற்றுக்கொள்ளத்தக்கதாக கண்டறியப்படவில்லை. ஏற்கனவே இவ்வாறான ஆவணங்கள் தணிக்கை குழுவிற்கு கள அலுவலர்களால், மேற்படி கணக்கு சீட்டினை ரத்து செய்ய பரிந்துரைக்க கோரிய கோப்புகளை ஏற்றுக் கொள்ளாமல், நிராகரிக்கப்பட்டது அறியவருகிறது.*

*எனவே மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள போதிய ஆவணங்கள் இல்லாததால், இம்மன்றம் மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து, மனுதாரரின் மின் இணைப்பு தொடர்பாக மேற்படி கணக்கு சீட்டில் குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையான ரூ.**6,39,108/–** யை உடனடியாக உண்டான உரிய வாரிய அலுவலகத்தில் செலுத்துமாறு அறிவுறுத்தி உத்தரவிடப்படுகிறது.*

*இவ்வாறாக மேற்படி மனு எண்.**05/24.03.17** ஆனது இம்மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது.*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

**4.1** என்னுடைய மின் இணைப்பு எண்.**004–016–697** பட்டியல் விகிதம் IIIB / **24** KW பவர்லூம் தொழிலுக்காக பெற்றிருக்கிறேன். மேற்படி மின் இணைப்பிலிருந்த மின் அளவி பழுது என கூறி **6/2009** முதல் **1/2013** முடிய அதற்கான காலத்திற்கு சராசரி கட்டணமாக ரூபாய்.**6,39,108/–** செலுத்த வேண்டும் என தணிக்கை துறையினரால் அறிவிப்பு வழங்கப்பட்டது. நான் மேற்கண்ட தொகையை ரத்து செய்யக்கோரி தலைவர் கரூர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மனு எண். **05/2017** –ன் படி **24.03.2017** அன்று விண்ணப்பம் செய்ததை மன்றம் ஆணை நாள் **03.05.2017** வாயிலாக என்னுடைய கோரிக்கையை ரத்து செய்து விட்டது. நான் மன்றம் ரத்து செய்த கடிதத்தை **13.05.2017** ஆம் தேதி பெற்றேன்.

**4.2** என்னால் சரிவர தொழில் செய்ய இயலாத காரணத்தால் என்னுடைய பவர்லூமை Lease–க்கு விட்டுவிட்டேன். Leaseக்கு எடுத்தவர்கள் job work தான் செய்தார்கள். அந்த காலகட்டத்தில் சரிவர மின்சாரம் இல்லாத காரணத்தால் job work ஐயும் அவர்களால் சரிவர செய்ய இயலாத காரணத்தால் அவர்களும் தொழிலை நிறுத்தி விட்டார்கள்.

4.3 என்னுடைய மின் இணைப்பிலிருந்த மின் அளவி பழுது என கூறும் காலங்களில் Reading type “Normal” தான் மின் அளவி பழுது கிடையாது. உபயோகம் மட்டுமே குறைவு.

4.4 மின் இணைப்பில் பொருத்தப்பட்ட Static Meter பழுதடைந்து விட்டால் உடனடியாக கழற்றி MRT க்கு அனுப்பி CMRI down load data பதிவு இறக்கம் செய்து பட்டியல் திருத்தி அமைக்க வேண்டும் என வாரியம் வலியுறுத்திய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. மின் அளவி பழுதடைந்ததால் பயனீட்டு அளவு குறைந்தது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, தணிக்கை துறையினரால் கோரப்பட்டுள்ள ரூபாய்.6,39,108/– தள்ளுபடி செய்து தக்க தீர்ப்பினை வழங்க அன்புடன் வேண்டுகிறேன்.

**5. <u>எதிர்மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் எடுத்துரைத்த வாதங்கள் :</u>**

5.1 மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பு எண்.004–016–0697/TF. IIIBற்கு 6/2009 முதல் 2/2013 வரை உள்ள மாதங்களுக்கு மீட்டர் பழுதான காலத்திற்கு சராசரி கணக்கீடு தொகையாக ரூ.6,39,108/–ஐ வசூல் செய்ய தணிக்கை தாள் 2, நாள் 13.11.2014ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, மேற்படி தொகையை செலுத்தக் கோரி மின் நுகர்வோருக்கு கடிதம் அளிக்கப்பட்டது.

5.2 மேற்கண்ட மின்இணைப்பு இருந்த இடத்தில் 6/2009 முதல் 1/2013 வரை தொழில் நடைபெறாததால் மேற்படி சராசரி தொகையை தள்ளுபடி செய்ய நுகர்வோர் ஏற்கனவே 30.1.2015ல் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மின்இணைப்பை இள நிலை மின் பொறியாளர்/இகா/வெங்கமேடு அவர்களால் ஆய்வு செய்து அம்மின் இணைப்பு இருந்த இடம் 18.06.2008 முதல் 17.6.2011 வரை மூன்று வருடங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு பாதியில் சொந்த காரணங்களுக்காக 10.6.2009 முதல் இடத்தை காலி செய்து விட்டதாகவும் மின் நுகர்வோர் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளதையும், உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட தணிக்கை தொகையை ரத்து செய்ய உதவி செயற் பொறியாளர்/இகா/வடக்கு/கரூர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு அதற்கான கடிதம் 21.5.2015 அன்று துணை தலைமை உட் தணிக்கை அலுவலர்/ திருச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

5.3 துணை தலைமை உட்தணிக்கை அலுவலர்/திருச்சி அவர்களிடமிருந்து எம்.ஆர்.டி அறிக்கை மற்றும் 8/2009 முதல் 10/2012 வரை யாராவது ஒரு ஆய்வு அலுவலர் மேற்கண்ட மின்இணைப்பை ஆய்வு செய்ததற்கான அறிக்கை கேட்கப்பட்டது. மேற்படி மின்இணைப்பினை

யாரும் ஆய்வு செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் முந்தைய ஆய்வு அலுவலர் மேற்கண்ட மின் இணைப்பினை யாரும் ஆய்வு செய்த ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்றும் மற்றும் கணினி பதிவில் ஆய்வின் பதிவு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டதில் பதில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதால் தணிக்கை குழுவினரால் கூறப்பட்ட தொகை ரூ.6,36,108/– வசூல் செய்யுமாறு தணிக்கை அலுவலரிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி தொகையை செலுத்துமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று செயற்பொறியாளர்/இகா/ நகரியம் / கரூர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 7.11.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. ஆர். ஜோதிபாசு அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. T. மகாலிங்கம் உதவி செயற்பொறியாளர்/வடக்கு/கரூர் மற்றும் திரு. M. முருகன், உதவி பொறியாளர்/வெங்கமேடு ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

**7. <u>கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மேல்முறையீட்டிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 தன்னுடைய மின் இணைப்பிலிருந்த மின் அளவி பழுது என கூறி 6/2009 முதல் 1/2013 முடிய சராசரி கட்டணமாக ரூபாய்.6,39,108/– செலுத்த வேண்டும் என தணிக்கை துறையினரால் மின் பயன்பாடு இல்லாத நிலையில் அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், அதை ரத்துசெய்ய கோரி தலைவர் கரூர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியதாகவும் ஆனால் மன்றம் அவரது கோரிக்கை நிராகரித்து விட்டதாகவும் தெரிவித்தார்.

7.3 அவரால் சரிவர தொழில் செய்ய இயலாத காரணத்தால் மேற்படி மின்னிணைப்புள்ள பவர்லூமை Lease–க்கு விட்டுவிட்டதாகவும், Leaseக்கு எடுத்தவர்கள் job work செய்ததாகவும்,

அந்த காலகட்டத்தில் சரிவர மின்சாரம் இல்லாத காரணத்தால் job work ஐயும் அவர்களால் சரிவர செய்ய இயலாத காரணத்தால் அவர்களும் தொழிலை நிறுத்தி விட்டதாகவும் தெரிவித்தார். அவருடைய விசைத்தறியை வாடகை எடுத்து நடத்திவந்த வாடகைதாரர் அவரது சொந்தக்காரணங்களுக்காக அவர் ஒப்புக்கொண்ட 3 வருட காலக் கெடுவிற்கு முன்னதாகவே 10.06.2009 –ம் தேதி காலிசெய்து விட்டதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் பல முறை வாடகை ஒப்பந்த பத்திர நகலுடன் உதவி மின் பொறியாளர்/இ&கா/வெங்கமேடு மூலமாக முறையீடு செய்தும், அவருடைய வாடகை ஒப்பந்த பத்திரத்தை ஆய்வு செய்யாமல் பணம் செலுத்த கேட்டுக்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

7.4 மேலும் அவருடைய மின் இணைப்பிலிருந்த மின் அளவி பழுது என கூறும் காலங்களில் Reading type “Normal” என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதனால் மின் அளவி பழுது இல்லை என்றும் வாதிட்டார். மேலும் மேற்குறிப்பிட்ட காலங்களில் உபயோகம் மட்டுமே குறைவு என்றும் வாதிட்டார்.

7.5 மேலும் வாரியம் தன்னுடைய சுற்றறிக்கையில் அறிவுறுத்தியுள்ளதன் அடிப்படையில் ஒரு மின் இணைப்பில் பொருத்தப்பட்ட Static Meter பழுதடைந்து விட்டால் உடனடியாக கழற்றி MRT க்கு அனுப்பி CMRI down load data பதிவு இறக்கம் செய்து பட்டியல் திருத்தி அமைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளதாகவும், ஆனால் அவ்வாறு அவருடைய மின்னளவி சோதிக்கப்படவில்லையாதலால் மின் அளவி பழுது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

7.6 ஆகவே, மின்அளவு பழுது என்பதற்கு முறையான ஆவணங்களோ அல்லது சோதனை அறிக்கையோ இல்லாத காரணத்தால் தணிக்கை துறையினரால் கோரப்பட்டுள்ள ரூபாய்.6,39,108/– தள்ளுபடி செய்ய கோரினார்.

7.7 மேலும் 18.01.2013 அன்று மின் அளவி மாற்றப்பட்டதற்கு பின்பு 2/2013 மாதத்திலிருந்து மின்பயன்பாடு ஏன் அதிகமாக உள்ளது என்று கேட்கப்பட்டதற்கு மேற்கண்ட மின்னிணைப்புள்ள பவர் லூமை மேல்முறையீட்டாளர் தானே சுயமாக நடத்திவருவதாகவும் அதனால் மின்பயன்பாடு அதிகமாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

## 8. <u>கேட்புரை நாளில் எதிர்மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர்கள் அவர்களது பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்கள்.

8.2 மின் இணைப்பு எண்.004–016–0697/TF. IIIB-ற்கு 6/2009 முதல் 2/2013 வரை உள்ள மாதங்களுக்கு மீட்டர் பழுதான காலத்திற்கு சராசரி கணக்கீடு தொகையாக ரூ.6,39,108/–ஐ வசூல் செய்ய தணிக்கை தாள் 2, நாள் 13.11.2014ல் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, மேற்படி தொகையை செலுத்தக் கோரி மின் நுகர்வோருக்கு கடிதம் அளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

8.3 மேலும் கடிதத்தை பெற்றுக்கொண்ட மேல்முறையீட்டாளர் அவருடைய மின்இணைப்பு இருந்த இடத்தில் 6/2009 முதல் 1/2013 வரை தொழில் நடைபெறாததால் மேற்படி சராசரி தொகையை தள்ளுபடி செய்ய கோரி இள நிலை மின் பொறியாளர்/இகா/வெங்கமேடு அவர்களை அணுகியதாக தெரிவித்தார். அதன் அடிப்படையில் இளநிலை மின் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு அம்மின் இணைப்பு இருந்த இடம் 18.06.2008 முதல் 17.6.2011 வரை மூன்று வருடங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு பாதியில் சொந்த காரணங்களுக்காக 10.6.2009 முதல் இடத்தை காலி செய்து விட்டதை உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட தணிக்கை தொகையை ரத்து செய்ய துணை தலைமை உட் தணிக்கை அலுவலர்/ திருச்சி அவர்களுக்கு உதவி செயற் பொறியாளர்/இகா/வடக்கு/கரூர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டதாக தெரிவித்தார்.

8.4 ஆனால் துணை தலைமை உட்தணிக்கை அலுவலர்/திருச்சி அவர்கள் உதவி செயற் பொறியாளர்/இகா/வடக்கு/கரூர் அவர்களின் பரிந்துரையை நிராகரித்து எம்.ஆர்.டி அறிக்கை மற்றும் 8/2009 முதல் 10/2012 வரை யாராவது ஒரு ஆய்வு அலுவலர் மேற்கண்ட மின்இணைப்பை ஆய்வு செய்ததற்கான அறிக்கை கோரப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆனால் முந்தைய ஆய்வு அலுவலர் மேற்கண்ட மின் இணைப்பினை ஆய்வு செய்த ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்றும் மற்றும் கணினி பதிவின் ஆய்வில் பதிவு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டதில் பதில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதால் தணிக்கை தொகையை வசூல் செய்யுமாறு கடிதம் பெறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

**8.5** மேலும் மின்இணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட மின் அளவி Electro Mechanical Meter எனவும் ஆதலால் CMRI யில் data download செய்ய முடியவில்லை என்றும் தெரிவித்தார். மின் அளவி Electro Mechanical Meter என்பதால் மின்அளவி Sluggish ஆக இருந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

**9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

**9.1** இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இவ்வழக்கில் மின்அளவி பழுதா ? அப்படி பழுது எனில் எந்த கணக்கீடு காலத்திலிருந்து பழுது என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

**9.2** மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பில் **6/2009** முதல் **1/2013** முடிய பயன்பாடு குறைவாக இருந்தாகவும் ஆனால் எதிர்மனுதாரர் மின்அளவி பழுது என சராசரி கட்டணமாக ரூபாய்.**6,39,108/–** செலுத்த வேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், அதை ரத்துசெய்ய கோரி தலைவர் கரூர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியதாகவும் ஆனால் மன்றம் அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

**9.3** மேல்முறையீட்டாளரால் சரிவர தொழில் செய்ய இயலாத காரணத்தால் மேற்படி மின்னிணைப்புள்ள பவர்லூமை Lease–க்கு விட்டுவிட்டதாகவும். Leaseக்கு எடுத்தவர்கள் job work செய்ததாகவும், அந்த காலகட்டத்தில் சரிவர மின்சாரம் இல்லாத காரணத்தால் job work ஐயும் அவர்களால் சரிவர செய்ய இயலாத காரணத்தால் அவர்களும் தொழிலை நிறுத்தி விட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அவருடைய விசைத்தறியை வாடகை எடுத்து நடத்திவந்த வாடகைதாரர் அவரது சொந்தக்காரணங்களுக்காக அவர் ஒப்புக்கொண்ட **3** வருட காலக் கெடுவிற்கு முன்னதாகவே அதாவது **10.06.2009** –ம் தேதியே காலிசெய்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வாடகை ஒப்பந்த பத்திர நகலையும் சமர்பித்துள்ளார்.

**9.4** எதிர்மனுதாரரோ தன்னுடைய பதிலுரையில் மேல்முறையீட்டாளர் மனு செய்ததின் அடிப்படையில் இளமின் பொறியாளர் மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு இருந்த இடத்தில் ஆய்வு செய்து அம்மின் இணைப்பு இருந்த இடம் **18.06.2008** முதல் **17.6.2011** வரை மூன்று வருடங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு பாதியில் சொந்த காரணங்களுக்காக **10.6.2009** முதல் இடத்தை காலி செய்து விட்டதை உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில்

தணிக்கை தொகையை ரத்து செய்யவும் துணை தலைமை உட் தணிக்கை அலுவலர்/ திருச்சி அவர்களுக்கு உதவி செயற் பொறியாளர்/இகா/வடக்கு/கரூர் அவர்களின் மூலம் பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

**9.5** ஆனால் துணை தலைமை உட்தணிக்கை அலுவலர்/திருச்சி அவர்கள் உதவி செயற் பொறியாளர்/இகா/வடக்கு/கரூர் அவர்களின் பரிந்துரையை நிராகரித்து எம்.ஆர்.டி அறிக்கை மற்றும் 8/2009 முதல் 10/2012 வரை யாராவது ஒரு ஆய்வு அலுவலர் மேற்கண்ட மின்இணைப்பை ஆய்வு செய்ததற்கான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.6** ஆனால் எதிர்மனுதாரரால் எம்.ஆர்.டி அறிக்கையையோ அல்லது முந்தைய ஆய்வு அலுவலர் மேற்கண்ட மின் இணைப்பினை 8/2009 முதல் 10/2012 வரை ஆய்வு செய்த ஆய்வு அறிக்கையோ சமர்பிக்கப்படவில்லை என்பதால் எதிர்மனுதாரரின் பதில் தணிக்கை குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என தெரியவருகிறது.

**9.7** மேலும் எதிர்மனுதாரரிடம் ஏன் மின் அளவியின் பதிவுகளை பதிவிறக்கம் செய்து மனுதாரரின் குறையை பரிசீலிக்கவில்லை என்றதற்கு மின்இணைப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட மின் அளவி Electro Mechanical Meter எனவும், ஆதலால் CMRI யில் data download செய்ய முடியவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மின் அளவியை ஏன் பரிசோதனை செய்யவில்லை என்றதற்கு தங்களிடம் பரிசோதனை செய்யும் வசதி இல்லையென்றார். இந்த சூழ்நிலையில் எதிர்மனுதாரர் அனுமதிக்கப்பட்ட பரிசோதனை கூடத்தில் மின் அளவியை பரிசோதனை செய்து மின் அளவி பழுது என நிரூபிக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார்.

**9.8** மேல்முறையீட்டாளரோ தன்னுடைய மின்இணைப்பில் 12/2012 காலத்தில் தான் மின்னளவி பழுது என்று தெரிவிக்கப்பட்டு சராசரி தொகை விதிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு முன்பு Reading type normal என்று போடப்பட்டுள்ளதால் 6/2009 முதல் 10/2012 வரை மின் அளவி பழுது என்பது தவறு என்று வாதிட்டுள்ளார்.

**9.9** இந்த வழக்கில் மின்னளவி பழுது என்பதற்கு பரிசோதனை அறிக்கை எதுவும் எதிர்மனுதாரரால் சமர்பிக்கப்படவில்லை. கணிணியில் உள்ள விவரங்களின்படி 6/2009 முதல் 10/2012 வரை அதாவது 26.10.2012 வரை Reading type normal என்றுதான் போடப்பட்டுள்ளது,

27.12.2012 அன்று மின் பயனீட்டளவு கணினியில் பதிவிடும்போதுதான் மின்அளவி பழுது என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 6/2009 முதல் 10/2012 வரை அதாவது 26.10.2012 வரை மின்அளவி பழுதில்லை என கருதவேண்டியுள்ளது. எனவே மின்அளவி பழுதில்லா காலமான 6/2009 முதல் 10/2012 வரை சராசரி மின்கட்டணம் விதிப்பது தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதிகளின்படி சரியான நடைமுறையில்லை என்பதால் மேற்குறிப்பிட்ட காலங்களுக்கு விதிக்கப்பட்ட சராசரி கட்டணத்தை தள்ளுபடி செய்யலாம் என்று நான் கருதுகிறேன்.

9.10 பத்தி 9.9ல் உள்ள தீர்வின்படி 6/2009 முதல் 10/2012 வரை அதாவது 26.10.2012 வரை மின்அளவி பழுதில்லை என தீர்வு செய்யப்படுகிறது. 27.10.2012 முதல் 27.12.2012 ற்கு இடைப்பட்ட காலத்தில்தான் மின்அளவி பழுதாகியுள்ளது. எனவே, 27.10.2012 முதல் 18.01.2013 அதாவது மின்அளவி மாற்றப்பட்ட நாள்வரை உள்ள காலத்தை மின்அளவி பழுதான காலமாக கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதி 11–ன்படி சராசரி மின்கட்டணம் விதிக்கலாம் என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

## 10. <u>கவனிப்பாய்வு</u> :

8/2009 முதல் 12/2012 வரையிலான சுமார் மூன்று வருடம், நான்கு மாதங்கள் மின்இணைப்பினை களப்பணியாளர், மேற்பார்வையாளர் மற்றும் அலுவலர்கள் யாரேனும் கள ஆய்வு செய்ததற்கான ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெறவில்லை என்று கூறுவதை கவனத்தில் கொள்ளவேண்டும். புதிய மின் அளவி பொருத்திய பிறகு விடுவிக்கப்படும் பழுதான மின் அளவியை பரிசோதனைக் கூடத்தில் பரிசோதனை செய்து பழுதை உறுதி செய்ய வேண்டியது உரிமம்தாரரின் கடமையாகும்.

எதிர்காலத்தில் இதுபோன்ற செயல்கள் நிகழாமலிருக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு உரிமம்தாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

**11. முடிவுரை**

**11.1** பத்தி 9ல் உள்ள தீர்வின்படி தணிக்கை குழுமத்தினரால் விதிக்கப்பட்ட தணிக்கை தொகையில் 6/2009 முதல் 10/2012 வரை அதாவது 26.10.2012 வரை உள்ள காலஅளவிற்கான சராசரி மின் கட்டணத்தை தள்ளுபடி செய்ய வேண்டுமென தீர்வு செய்யப்படுகிறது.

**11.2** 27.10.2012 முதல் 18.01.2013 வரை மின்அளவி பழுதான காலமாக கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதி 11–ன்படி சராசரி மின்கட்டணம் விதிக்கலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

**11.3** மேற்கண்ட தீர்வினை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் நிறைவேற்றியமைக்கான அறிக்கையை (compliance report)–ஐ 45 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

**11.4** மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.56/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. ஆர். ஜோதிபாசு,
த/பெ ராமசாமி,
எண்.208, கருப்பண்ண கவுண்டர் தெரு,
வெங்கமேடு,
கரூர்–639 006.

2) செயற்பொறியாளர்/நகர்புறம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு,
கரூர்–639 002.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண்.3, கோவை ரோடு, கரூர்–639 002.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.